## தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை

### 2024 உலக குடியிருப்பு தினம் - பாடசாலைகளுக்கிடையிலான வரைதல், கட்டுரைப் போட்டி

அக்டோபர் மாதம் 07ஆம் திகதியில் இடம்பெறும் 2024 உலக குடியிருப்பு தினத்தை முன்னிட்டு ஒழுங்கு செய்யப்பட்டுள்ள வரைதல், கட்டுரை போட்டிகளில் பங்குபற்றுமாறு நாட்டின் சகல பாடசாலை மாணவ / மாணவிகளுக்கும் இதன் மூலம் அழைப்பு விடுக்கப்படுகிறது.

**உங்கள் ஆக்கங்களுக்கு அடிப்படையாக கொள்ளக் கூடிய விடயங்கள்.**

- எதிர்கால நகரமொன்றின் குடியிருப்பு
- இளைஞர் பலத்தினை திட்டமிட்ட ஒரு நகர நிர்மாணத்திற்கு எவ்வாறு ஈடுபடுத்திக் கொள்ள முடியும்.
- குடியிருப்பு நிர்மாணத்தில் நவீன தொழில்நுட்பத்தின் பாவனை.
- சுற்றாடல் நலன்சார்ந்த நகர மக்களின் வாழ்வு.

மேற்குறிப்பிட்ட ஒரு கருத்தை அல்லது சகல கருத்துக்களையும் உள்ளடக்கியதாக தமது வரைதலை, கட்டுரையை ஆக்கம் செய்யலாம்.

**போட்டிக்கான பங்குபற்றல்**

அரசாங்க பாடசாலைகளில் அல்லது தனியார் பாடசாலைகளில் கல்வி கற்கும் பின்வரும் பிரிவிற்க்குட்பட்ட எந்த ஒரு மாணவ மாணவிக்கும் பங்கேற்க முடியும்.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை ஊழியர்களின் பிள்ளைகள் இப்போட்டிகளில் பங்குபற்ற முடியாது.

**பாடசாலை வரைதல் போட்டி**
**வயதுக் குழுக்கள்**

முதலாவது பிரிவு - தரம் 03, 04, மற்றும் 05 தரம்

இரண்டாவது பிரிவு தரம் 06, 07, 08, மற்றும் 09 தரம்

மூன்றாவது பிரிவு தரம் 10, 11, 12, மற்றும் 13 தரம்

**ஆக்கங்களை முன்வைக்க வேண்டிய முறை**

வரைதல் போட்டிக்கான ஆக்கங்கள் 17x22 அங்குல கடதாசியில் வரையப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

இந்த வரைதலுக்காக பெஸ்டல், நீர்ச்சாயம், பென்சில், போன்ற எந்தவிதமான வர்ணங்களையும் பயன்படுத்தலாம். **(மேற்படி நிபந்தனைகள் பூரணப்படுத்தப்படாத சித்திரங்கள் நிராகரிக்கப்படும்)**

**பாடசாலை கட்டுரைப் போட்டி**
**போட்டிப் குழுக்கள்**

முதலாவது குழு – தரம் 06 முதல் 09 ஆம் தரம் வரை
(300 சொற்களுக்குட்பட்டது.)

இரண்டாவது குழு – தரம் 10 முதல் 13 ஆம் தரம் வரை
(500 சொற்களுக்குட்பட்டது.)

**மொழி**

(1) சிங்களம்

(2) தமிழ்

**ஆக்கங்களை முன்வைக்கும் வேளையில்**

முதலாவது குழு – விண்ணப்பதாரிகள் 300 சொற்களுக்குட்பட்டதாக தமது கட்டுரைகளை முன்வைத்தல் வேண்டும்

இரண்டாவது குழு – விண்ணப்பதாரிகள் 500 சொற்களுக்குட்பட்டதாக தமது கட்டுரைகளை முன்வைக்க வேண்டும்.

**வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள்**

சகல போட்டிகளுக்கும் பின்வரும் வகையில் பரிசில்கள் வழங்கப்படும்.

**முதலாமிடம்**
**ரூபா 15,000 பணப்பரிசுடன் கிண்ணமும், சான்றிதழும்**
**இரண்டாமிடம்**
**ரூபா 10,000 பணப்பரிசுடன் கிண்ணமும், சான்றிதழும்**
**மூன்றாமிடம்**
**ரூபா 7,500 பணப்பரிசுடன் கிண்ணமும், சான்றிதழும்**
**திறமைக்கான பரிசுகள்**
**ரூபா 3000 வீதம் 10 பணப்பரிசுகளும் சான்றிதழ்களும்**

**வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு**

வெற்றியாளர்களுக்கான பரிசளிப்பு 2024 உலக குடியிருப்பு தின வைபவத்தின் போது வழங்கப்படும்.

**ஆக்கங்களை முன்வைக்க வேண்டிய விதம்**

சகல விண்ணப்பதாரிகளும் அதற்குரிய விண்ணப்பத்துடன் தன்னால் முன்வைக்கப்படும் ஆக்கங்கள் தமது சொந்த ஆக்கங்கள் என்பதை தாம் கல்வி கற்கும் பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தி 2024 செப்டம்பர் 06ஆம் திகதிக்கு முன்னர் தபாலில் அல்லது நேரடியாக பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பம் இல்லாது முன்வைக்கப்படும் ஆக்கங்கள் நிராகரிக்கப்படும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் உலக குடியிருப்பு தினம் 2024-ஆக்கம் என குறிப்பிடவும்.

மேற்படி போட்டிக்கான சகல விண்ணப்பங்களை கீழே உள்ள முகவரியில் அல்லது தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை மாவட்ட அலுவலகங்களிலிருந்து அல்லது www.nhda.gov.lk என்ற இணையத்தளத்தின் ஊடாகவும் பெற்றுக்கொள்ள முடியும்.

முகவரி **உதவிப் பொது முகாமையாளர்(தகவல் மற்றும் பிரசாரம்)**
**தகவல் மற்றும் பிரசாரப் பிரிவு**
**7-ம் மாடி,**
**தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை**
**சித்தம்பலம் ஏ காட்னர் மாவத்தை**
**கொழும்பு 02**

**தொ.பேசி 011-2447038 / 011-2389513 / 0112-447207**

## உலக குடியிருப்பு தினம் 2024

**பாடசாலை கட்டுரை, வரைதல் போட்டிகளுக்கான விண்ணப்பம்**

**பங்குபற்றும் போட்டிப் பிரிவு**

01. விண்ணப்பதாரியின் முழுப்பெயர்-
…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

02. கல்வி கற்கும் பாடசாலை மற்றும்
தரம் ………………………………………………………………………………
…………………………………………………………………………………………

03. பாடசாலை அமைந்துள்ள மாவட்டம் மற்றும்
தொலைபேசி இலக்கம் ..………………………………………………………………
………………………

04. சொந்த முகவரி மற்றும் தொலை பேசி இலக்கம் ……………………………………
……………………………………………………………………………………..

05. பிறந்த திகதி ………………………………………………………………………

06. 2024 ஆகஸ்ட் மாதம் 01 ஆம் திகதியில் வயது ……………………………………

இந்த விண்ணப்பத்துடன் முன்வைக்கப்பட்டுள்ள வரைதல், கட்டுரை, எனது ஆக்கம் என்பதை உறுதிப்படுத்துவதோடு, குறித்த சித்திரம், கட்டுரை, போட்டி விதிகளுக்கேற்ப முன்வைக்கப்பட்டுள்ளதுடன், போட்டி மத்தியஸ்தர்களால் மேற்கொள்ளப்படும் எந்த முடிவுக்கும் உடன்படுகிறேன் என்பதையும் அறியத்தருகிறேன்.

………………………………..

திகதி ……………….. விண்ணப்பதாரியின் கையொப்பம்

……………………………………………………… அவர்களால் இந்த விண்ணப்பத்துடன் முன்வைக்கப்பட்டுள்ள கட்டுரை, சித்திரம், விண்ணப்பதாரியின் சொந்த ஆக்கம் என்பதையும் இவ்விண்ணப்பத்தில் அவரால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மையானவை என்பதையும் உறுதிப்படுத்துகிறேன்.

………………………

**அதிபரின் கையொப்பம் மற்றும் பதவி முத்திரை**

திகதி : …………………………

**கவனிக்கவும் :- (உங்களது ஆக்கங்களின் பின்புறமாக விண்ணப்பப்படிவம் ஒட்டப்படுமானால் அது நிராகரிக்கப்படும். உங்களது ஆக்கங்களுடன் விண்ணப்பப்படிவத்தினை இணைத்து அனுப்பவும்.)**